| | |
|---|---|
| **Minister for Rural Industries** | Thiru P. Mohan |

| | |
|---|---|
| **Secretary to Government** | Thiru K.Dhanavel IAS<br>Phone:  25671476 (O), 26532439 (R) 25675453 (Fax)<br>Email: sindsec@tn.gov.in |

---

**HARMANDER SINGH, I.A.S.,**
Industries Commissioner and Director of Industries and Commerce (044 24951509)

---

**K. Govindarajan,** M.E.,

General Manager, District Industries Centre, SIDCO industrial estate, Five roads, Salem – 636 004 (04272447878)

---

**புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டம்**
**குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் (டி2) துறை ,**
**அரசு ஆணை எண் (எம்எஸ்) எண். 49, நாள் 29.10.2012**

**சேலம் மாவட்டத்திற்கான குறியீடு**

| | இலக்கீடு (பயனாளிகள்) | | | இலக்கீடு (மானியம்) ரூ. இலட்சத்தில் | | |
|---|---|---|---|---|---|---|
| | மா.தொ.மை | டி.ஐ.ஐ.சி. | மொத்தம் | மா.தொ.மை | டி.ஐ.ஐ.சி. | மொத்தம் |
| ஆண் | 12 | 6 | 18 | 150 | 75 | 225 |
| பெண் | 12 | 6 | 18 | 150 | 75 | 225 |
| மொத்தம் | 24 | 12 | 36 | 300 | 150 | 450 |

**<u>குறிக்கோள்</u>**

- முதல் தலைமுறை தொழில் முனைவோர்களை இலக்காகக் கொண்டு செயல்படும் இத்திட்டத்தின் கீழ், படித்த இளைஞர்களுக்கு பெருந்தொழில் வர்த்தகர்களுடன் பரிச்சயம் ஏற்படுத்துவதுடன், தொழில் முனைவோர்களுக்கான பயிற்சி அளிக்கவும், அவர்கள் வணிகத் திட்டங்களை வகுக்க உதவவும், மேலும் நிதி நிறுவனங்களோடு புதிய தொழில் தொடங்க ஆயத்தம் செய்யவும் உதவுவது.

**<u>தகுதிகள்</u>**

- வயது – குறைந்தபட்சம் 21 அதிகபட்சம் பொது பிரிவினருக்கு 35, சிறப்பு பிரிவினருக்கு (மகளிர்/தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின வகுப்பினர்/பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சிறுபான்மையினர்/முன்னாள் இரானுவத்தினர்/திருநங்கைகள்/ மாற்றுதிறனாளிகள்) வயது 45
- கல்வித்தகுதி –பட்டபடிப்பு, பட்டயபடிப்பு மற்றும் தொழிற்பயிற்சி (ஐடிஐ / வொக்கேசனல் பயிற்சி)
- இருப்பிடம் –குறைந்தபட்சம் 3வருடம் தமிழ்நாட்டில் வசிப்பவராக இருக்கவேண்டும் .
- சிறப்பு ஒதுக்கீடு– மகளிர்–50 சதவீதம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 18 சதவீதம் பழங்குடியின வகுப்பினர்–1 சதவீதம் மற்றும் மாற்றுதிறனாளிகள் 3 சதவீதம்.
- வருமான உச்சவரம்பு– இல்லை.
- கூட்டு தொழில்நிறுவனங்கள்– மேற்கண்ட தகுதிகள் அனைத்து பங்குதாரர்களும் பெற்றிருக்கும் பட்சத்தில் இத்திட்டத்தில் பயன்பெற தகுதியானவை. எனினும் தொழிற்முனைவோர் பயிற்சி இதர பங்குதாரர்களால் பரிந்துரை செய்யப்படும் ஒரு பங்குதாரருக்கு மட்டும் வழங்கப்படும்.
- இதர நிபந்தனைகள்– புதிய தொழில்களுக்கு மட்டும். சொந்த முதலீட்டில் தொடங்கப்படும் தொழில்கள் தகுதியற்றவை, முதல் தலைமுறை தொழிற் முனைவோராக இருக்க வேண்டும், மத்திய மற்றும் மாநில இதர திட்டங்களில் பயன் பெற்றவர்கள் இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள். வங்கிகளில் கடன்பெற்று முறையாக திருப்பி செலுத்தாதவர்களாக இருக்கக்கூடாது.

**<u>தொழில் நடவடிக்கைகள்</u>**

- உற்பத்தி மற்றும் சேவை தொழில் நடவடிக்கைகள் ( அரசு ஆணை எண்.49 சிறு , குறு, மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (டி2) துறை நாள்29.10.2012 இணைப்பு II –ல் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்கள் தவிர.

**<u>திட்ட மதிப்பீடு</u>**

- ரூபாய் ஐந்து இலட்சத்தில் இருந்து ரூபாய் ஒரு கோடி வரை.
- கட்டிடங்களின் மதிப்பு மொத்த திட்ட மதிப்பில் 25 சதவீதங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். சேவை நிறுவனங்களில் இயந்திரங்களின் மதிப்பு மொத்த திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதத்திற்கு குறையாமல் இருக்க வேண்டும்.
- திட்ட முதலீடு – திட்ட மூலதனம் மற்றும் நடைமுறை மூலதனத்திற்கான சுயமுதலீடு
- திட்ட மூலதனம் – இடம், கட்டிடம் மற்றும் இயந்திரங்களுக்கான முதலீடு.
- புதிய இயந்திரங்கள் மற்றும் நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட பழைய இயந்திரங்கள் தகுதியானவை.

**<u>தொழில் முனைவோரின் பங்கு தொகை</u>**

- பொது பிரிவினருக்கு மொத்த திட்ட முதலீட்டில் 10 சதவீதம்.
- சிறப்புப் பிரிவினருக்கு மொத்த திட்ட முதலீட்டில் 5 சதவீதம்

**<u>மானியம்</u>**

- திட்ட முதலீட்டில் 25 சதவீதம் (உச்ச வரம்பு ரூ.25 இலட்சம்)
- 3 சதவீத வட்டி மானியம்

**<u>நிதி நிறுவனங்கள்</u>**

- தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மற்றும் அனைத்து வணிக வங்கிகள் (RRB , SIDBI உட்பட )

**<u>பயனாளிகளின் தேர்வு</u>**

- மாவட்ட அளவிலான தேர்வுக் குழு கூட்டம் இத் திட்டத்திற்கான பயனாளிகளைத் தேர்வு செய்யும்.
  - மாவட்ட ஆட்சித் தலைவர் – தலைவர்
  - பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம், சேலம் – உறுப்பினர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்
    - உறுப்பினர்கள் –
      - முன்னோடி வங்கி மேலாளர்
      - வங்கி மேலாளர்கள்
      - டி,ஐ,ஐ,சி மேலாளர்
      - டான்சிட்கோ மேலாளர்
      - தாட்கோ மாவட்ட மேலாளர்
      - மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர்
      - தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவன பிரதிநிதி
      - குறு, சிறு மற்றும் நடுத்தர வளர்ச்சி நிறுவன பிரதிநிதி
      - குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவன சங்கப் பிரதிநிதி

**<u>இது வரை மேற்கொள்ளப்பட்ட பணிகள்</u>**

- மாவட்ட அளவிலான தேர்வு குழு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ளது.

<u>**(NEEDS)**</u>

**MICRO, SMALL AND,MEDIUM ENTERPRISES (D2) DEPARTMENT G.O.(Ms).No.49, dated.29.10.2012.**

**Target for Salem District**

| | TARGET No of beneficiaries | | | SUBSIDY TARGET In Rs lakhs | | |
|---|---|---|---|---|---|---|
| | **DIC** | **TIIC** | **TOTAL** | **DIC** | **TIIC** | **TOTAL** |
| Men | 12 | 6 | 18 | 150 | 75 | 225 |
| Women | 12 | 6 | 18 | 150 | 75 | 225 |
| Total | 24 | 12 | 36 | 300 | 150 | 450 |

**Objective:**

- financial institutions to set up new business ventures, besides linking them with major industrial clients To assist educated youth to become first generation entrepreneurs by giving entrepreneur training, assisting to prepare their business plans and helping to tie up with.

**Eligibility:**

- **Age:** minimum 21 years and Maximum - 35 years for General Category Entrepreneurs & Maximum - 45 years for Special Category Entrepreneurs (Women / SC / ST / BC / MBC / Minorities / Ex-Servicemen / Transgenders / Differently abled persons
- **Education:** Educated youth with any Degree, Diploma, ITI / Vocational Training
- **Place of residence:** Resident of Tamil Nadu State for not less than 3 years.
- **Reservation:** SC- 18%, ST 1%, Differently abled 3% Besides, 50% of the allocation would be earmarked for women
- **Income ceiling :** No income ceiling

- **Partnership:** Eligible subject to satisfying the eligibility criteria by all the partners, under the scheme. However, EDP training will be provided to only one of the partners authorized by other partners in such cases
- **Other conditions:**
- Only for new projects. Self financed projects not eligible.
- Should be a First Generation Entrepreneur
- Entrepreneurs who have already availed assistance under any other scheme of Government of India or State Government will not be eligible for assistance. Should not be a defaulter.

**Activities:**

- Manufacturing and Service enterprise only except the activities listed in annexure II of G.O. Ms. No. 49 MSME (D2) Dept dated 29-10-12

**Project Cost**

- Above 5 lakhs and up to Rs 1 Crore
- (Cost of building should not exceed 25% of project cost. In case of service enterprise capital expenditure should not be less than 25% of project cost.)
- Project Cost includes Capital expenditure and Margin money for working capital
- Capital expenditure : investment on land, building and machinery.
- New Machineries and second hand machinery directly imported by entrepreneur only eligible.

**Promoter's contribution**

- 10% of project cost for general category
- 5% of project cost for special category

**Subsidy**

- Subsidy @ 25% of the Project Cost subject to a ceiling of Rs.25.00 lakhs
- 3% interest subvention

**Financial Institutions**

- TIIC and all commercial banks including RRB & SIDBI

**Selection of beneficiaries**

- Selection of beneficiaries for training will be done at the District level by a Task Force Committee

| | | |
|---|---|---|
| Chairman | : | District Collector |
| Member – convener | : | GeneralManager. DIC , Salem |
| : | | |
| Members | : | Lead District Manager |
| | | Branch Manager of Banks |
| | | Branch Manager, TIIC Ltd |

Branch Manager, TANSIDCO
District Manager, TAHDCO
District Employment Officer,
Representatives of EDI
MSME-DI
MSME Association

**Progress made so far**

District Level Task Force Committee constituted under the chairman of District Collector.